# தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம்

பதிவு எண்.124/MDS (அங்கீகரிக்கப்பட்டது)

793, அண்ணா சாலை, சென்னை–600 002.


தலைமையகம்: சென்னை. தேதி : 04.04.2015

## நம்பிக்கையும் விடியலும்

அன்பு பொறியாளர்களே,

வணக்கம். 17.03.2015 அன்று சென்னை, மின்சார வாரிய வளாகத்தின் முன்பு பட்டயப் பொறியாளர் நலன் காத்திடவும், மின்சார வாரியப் பணியாளர், அலுவலர், ஓய்வூதியம் பெறுவோர், குடும்பநல ஓய்வூதியம் பெறுவோர் என அனைத்து தரப்பினர் நலன் காத்திடவும் “மாபெரும் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்” 4000 உறுப்பினர்கள் பங்கேற்புடன் மிகச் சிறப்பாக நடத்தி சரித்திர சாதனை படைத்துள்ளோம்.

மின்வாரிய அதிகாரிகள், பணியாளர்கள், சகோதர தொழிற்சங்கங்களின் பாராட்டுக்கள் அனைத்தும் உங்களையே சாரும். உணர்ச்சியுடனும், உணர்வுடனும் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்று சங்கத்திற்கு பெருமையையும், கோரிக்கைகளின் ஆழத்தை அரசுக்கும், வாரியத்திற்கும் உணரச்செய்த உங்கள் அனைவருக்கும் பொறியாளர் சங்கத்தின் நெஞ்சார்ந்த நன்றியை காணிக்கையாக்குவதில் பெரு மகிழ்ச்சி அடைகிறோம்.

19.03.2015 அன்று மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களை சந்தித்து, கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் இயற்றப்பட்ட தீர்மானங்களை அளித்து நமது கோரிக்கைகளை நடைமுறைப்படுத்திட வேண்டினோம். அனைத்து கோரிக்கைகளையும் அதன் தற்போதைய நிலையையும் ஒன்றன்பின் ஒன்றாக விசாரித்து, நமது கோரிக்கைகள் நியாயமானதுதான் என்றும் மின்வாரிய தொழில்நுட்ப உதவியாளருக்கு அரசுத்துறை சம்பளம் வழங்கிட ஏற்கனவே தெரிவித்துள்ளதாகவும், அதனை விரைவுபடுத்திடுவதாகவும், வாரியம் ஏற்றுக்கொண்ட கோரிக்கைகளை நடைமுறைப்படுத்திட வாரியத்தலைவரிடம் நேரில் தெரிவிப்பதாகவும் நம்பிக்கையோடு இருங்கள், விரைவில் நல்லது நடக்கும் என்று மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

19.03.2015 அன்று மின்சார வாரியத்தலைவர் அவர்களை சந்தித்து பேசினோம். ஒவ்வொரு கால கட்டத்திலும் நடைபெற்ற நிகழ்வுகள் அளிக்கப்பட்ட உறுதிகள் ஆகியவற்றை ஆதாரங்களுடன் எடுத்துக்காட்டி இதுவரை வாரியம் எந்த நடவடிக்கையும் எடுக்காத நிலையில் அறப்போராட்டத்தின் அவசியத்தை, நமது தரப்பு நியாயத்தை எடுத்துரைத்தோம். ஒவ்வொரு விஷயத்திலும் பணியமைப்பு நிர்வாகத்தின் பாரபட்சமான அணுகுமுறைகளை சுட்டிக்காட்டி, நியாயம் வழங்கிட வலியுறுத்தினோம். நமது நிலைப்பாட்டினை வாரியத்திற்கு தொடர்ந்து தெரிவித்து வந்துள்ளதையும் எடுத்துரைத்தோம்.

அனைத்தையும் கேட்ட பின்னர் வாரியத்தலைவர் அவர்கள் AEE / NI, பதவி உயர்வுகள் / உள்முகத் தேர்வுகள் உடன் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்வதாகவும், மீதமுள்ள கோரிக்கைகள் ஒவ்வொன்றாக நடைமுறைப்படுத்திடுவதாகவும் அதற்கு கால அவகாசம் தேவை என்றும் தெரிவித்தார்கள்.

மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் மற்றும் வாரியத்தலைவர் ஆகியோருடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையை தொடர்ந்து 22.03.2015 அன்று சங்கத்தின் மையப் பொறுப்பாளர்கள் கூட்டம் நடைபெற்றது.

**நேரடி நடவடிக்கைகளைத்தொடர்ந்து ஏற்பட்டுள்ள நிலைமையை கவனத்துடன் பரிசீலித்த மையப் பொறுப்பாளர்கள் கூட்டம், அரசும், வாரியமும் கோரிக்கைகளை விரைந்து நடைமுறைப்படுத்திட உறுதியளித்ததை நம்பிக்கையுடன் ஏற்று 07.04.2015 முதல் நடைபெற உத்தேசித்த தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தை ஒத்தி வைத்திட ஏகமனதாக தீர்மானித்தது.**

26.03.2015 அன்று வாரியத்தலைவர் அவர்களை மீண்டும் நேரில் சந்தித்து நமது முடிவினை தெரிவித்தோம். வாரியத்தலைவர் அவர்கள் AEE / NI மற்றும் பதவி உயர்வுகள் வழங்கிட முன்னுரிமை அளித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மீண்டும் உறுதி அளித்தார்கள்.

தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு அரசுத்துறை சம்பளம் உள்ளிட்ட மற்ற கோரிக்கைகளையும் விரைந்து அமல்படுத்திட கோரினோம். ஏற்கனவே தெரிவித்தது போன்று ஒன்றன்பின் ஒன்றாக அவைகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், தான் அந்த கோப்புகளை பார்த்து முடிவெடுக்க சிறிது கால அவகாசம் தேவை என்றும் தெரிவித்தார்கள்.

30.03.2015 அன்று மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களை சந்தித்து பேசினோம். மிகுந்த பணிகளுக்கு இடையேயும் நம்முடன் விரிவாக பேசிய மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் நமது கோரிக்கைகளை நடைமுறைப்படுத்திட வாரியத்தலைவரிடம் நேரிடையாக தெரிவித்துள்ளதாகவும் விரைவில் நல்ல உத்தரவுகள் வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்கள்.

- 14 ஆண்டுகள் பணிமுடித்த இளநிலைப் பொறியாளர்களுக்கு உதவிச் செயற் பொறியாளர் / சார்பு அளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
- தொழில்நுட்ப உதவியாளரிலிருந்து இளநிலைப் பொறியாளர் இரண்டாம் நிலை பதவி உயர்வுக்கு 2012ல் வழங்கியது போன்றே “without prejudice to the outcome of the writ appeal” என்ற கருத்துடன் பதவி உயர்வு வழங்கிட வாரியத்தலைவர் அவர்களை வலியுறுத்தியுள்ளோம். வாரியத்தலைவர் அவர்கள் உரிய நடவடிக்கை மேற்கொள்வதாக தெரிவித்துள்ளார்கள்.
- இளநிலைப் பொறியாளர் முதல் நிலை பதவி உயர்வுகள் வழங்கிட நீதிமன்ற தடை ஏதுமில்லை என்பதை சுட்டிக்காட்டி பதவி உயர்வுகள் விரைந்து வழங்கிட வலியுறுத்தியுள்ளோம்.

அதுபோன்றே உள்முகத்தேர்வு வழங்குவதற்கும் உரிய நடவடிக்கை விரைந்து மேற்கொள்ள வலியுறுத்தியுள்ளோம். உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என மீண்டும் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

அன்பிற்கினிய உறுப்பினர்களே / பொறுப்பாளர்களே, கடுமையாக பணியாற்றி பொறியாளர் சங்கத்தின் ஒற்றுமையை, கட்டுப்பாட்டினை, ஒழுக்கத்தை மீண்டும் 17.03.2015ல் நாம் அனைவரும் உணர்வு பூர்வமாக நிரூபித்துள்ளோம்.

4000ம் பேர் காலை 10 மணி முதல் மாலை 6.30 மணி வரை உணர்வுபூர்வமாக ஆர்ப்பாட்டம் நடத்தியதையும், 20 நிமிட கால அவகாசத்தில் தங்கள் இருக்கையிலேயே அமர்ந்து உணவருந்தி தொய்வின்றி ஆர்ப்பாட்டத்தை தொடர்ந்து நடத்தியதையும், ஆர்ப்பாட்டத்தில் நமது கட்டுப்பாட்டையும் தொழிலாளர்கள், தொழிற்சங்கங்கள், வாரிய அதிகாரிகள் மட்டுமல்லாமல் காவல் துறையினரும் மனம் திறந்து பாராட்டியுள்ளனர்.

நமது நியாயமான கோரிக்கைகளுக்கு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு

தமிழ்நாடு மின்கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம்
தமிழ்நாடு மின்வாரிய கணக்காயர் மற்றும் களத் தொழிலாளர் சங்கம்
தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு
தமிழ்நாடு தேசிய மின் தொழிலாளர் சம்மேளனம் (ஐ.என்.டி.யு.சி) / (சேவியர்)
தமிழ்நாடு மின் ஊழியர் காங்கிரஸ்
பாரதீய மின் தொழிலாளர் சம்மேளனம்
தமிழ்நாடு மின் வாரிய டாக்டர் அம்பேத்கார் எம்ப்ளாயீஸ் யூனியன்
தமிழ்நாடு பொதுப்பணித்துறை பட்டயப் பொறியாளர் கழகம்
தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரிய பட்டயப் பொறியாளர் சங்கம்
தமிழ்நாடு டிப்ளமா பொறியாளர்கள் பேரவை
அகில இந்திய மின்வாரிய பட்டயப் பொறியாளர்கள் கூட்டமைப்பு

ஆகிய தொழிற்சங்கங்கள் / கூட்டமைப்புகள் ஆதரவும் வாழ்த்தும் தெரிவித்தனர்.

பின்னர், தமிழ்நாடு மின்சாரத் தொழிலாளர் சம்மேளனமும்,
தமிழ்நாடு மின்சார வாரிய ஜனதா தொழிற்சங்கமும்
ஆதரவும் வாழ்த்தும் தெரிவித்தனர்.

அனைத்து தொழிற்சங்கங்களுக்கும் நமது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவிப்பதுடன், சகோதர தொழிற்சங்கங்களின் ஒற்றுமைக்கும், இணைந்த செயல்பாட்டிற்கும் சங்கம் என்றும் உறுதுணையாக இருக்கும் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறோம்.

**பட்டயப் பொறியாளர்களின் உணர்வும், ஒற்றுமையும், போராட்ட குணமும் நீறு பூத்த நெருப்பாக இருக்கும் என்பதை 25.02.2015லும் 17.03.2015லும் நாம் மீண்டும் நிரூபித்துள்ளோம்.**

போராட்டம் என்பது நமது நோக்கம் அல்ல, கோரிக்கைகளை வென்றெடுப்பதே நமது நோக்கம். அதற்கான தார்மீகமான அறப்போராட்டங்களைத்தான் நாம் மேற்கொண்டோம்.

**நமது நியாயமான கோரிக்கைகள் நடைமுறைப்படுத்திட உறுதி அளித்திட்ட தொழிலாளர் நலன் காக்கும் தமிழக அரசுக்கும், மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களுக்கும், வாரியத்தலைவர் அவர்களுக்கும் சங்கத்தின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவிப்பதில் மகிழ்கிறோம்.**

04.04.2015 அன்று வாரியத்தலைவர் அவர்களை சந்தித்து வாரியம் ஏற்றுக்கொண்ட கோரிக்கைகளை மேலும் கால தாமதம் இன்றி நடைமுறைப்படுத்திட வலியுறுத்தியபோது நமது கோரிக்கைகள் மீதான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதை உறுதி செய்துள்ளார்கள்.

இந்நிலையில் சங்கத்தின் மைய பொறுப்பாளர்கள் கூட்ட முடிவின்படி 07.04.2015 முதல் நடைபெற உத்தேசித்த தொடர் உண்ணாவிரத போராட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இப்படை தோற்கின் எப்படை வெல்லும் என களம் கண்ட பொறியாளர்களே, மின்வாரிய தொழிற்சங்க வரலாற்றில், செயல்பாடுகளில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தி, உணர்வு பூர்வமான போராட்டம் என்றால், கட்டுப்பாடான, ஒழுக்கமான போராட்டம் என்றால் பொறியாளர் சங்கத்தின் போராட்டம் தான் என்ற நிலைப்பாட்டினை ஏற்படுத்தி, வாரியப்பணி மற்றும் மின்நுகர்வோர் சேவையில் சிறிதும் பாதிப்பின்றி அறப்போராட்டத்தை வெற்றிகரமாக நடத்திய கடமை தவறாத உணர்வுமிக்க பொறியாளர்களே, நமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் நாள் வெகு தொலைவில் இல்லை.

**நம்பிக்கையுடன் காத்திருப்போம். நமது கோரிக்கைகள் விடியலை காண்பது நிச்சயம்.**

**வாழ்க பொறியாளர் சங்கம்.** **வளர்க பொறியாளர் ஒற்றுமை.**

இவண்

**தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம்.**